## தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் - 2013

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் ஏனைய விளக்கத் தகவல்களையும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2014 யூன் 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் ஊழியர் ஒருவரால் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்காக முடிவுக் கணக்குகளில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படவோ அல்லது குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தலோ செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டில் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள ரூபா 100,000 கிரயத்திலான இரண்டு ஏக்கருக்கு கூடுதலான காணி, ரூபா 49,836,647 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமதி பூச்சியமாக இருந்த மற்றும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 16,130,639 கிரயப் பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

.
(இ) முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 250,033 செலவினமொன்று இனங்காணப்படாமல் தொடர்ந்தும் முற்பணமாகச் செலுத்தப்பட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

ஏனைய முற்பணக் கணக்கில் ரூபா 52,785 தொகையான அசாதாரணமான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன், அதனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு | பணிக்கொடை கணக்கிடும் போது ஆரம்ப சம்பளத்திற்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு சேர்க்கப்பட்ட பெறுமதி |

| | | |
|---|---|---|
| | | கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஆரம்ப சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை கணிப்பிடப் பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 | 2013 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக வரைவு ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 8 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | (i) 9.3.1 ஆம் பிரிவு | ரூபா 200,000 இற்கு மேற்பட்ட வாகன திருத்த நடவடிக்கைகளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 992,876 தொகைக்கு இரண்டு வாகனங்களை திருத்துவதற்குரிய செலவினத்திற்காக அத்தகைய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 4.3.1 மற்றும் 8.12.1 ஆம் பிரிவு | அகலவத்தை மாணவர் விடுதியில் குளியலறை அமைத்தல் மற்றும் நிலக்கற்கள் பதித்தல் என்பவற்றிற்காக ரூபா 207,900 தொகையான நிர்மாணத்திற்காக மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாதி ருந்ததுடன், பகுதிக் கொடுப்பனவு மற்றும் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளும் செயற்பாட்டிற்காக வேலை நிறைவேற்றப் படுகின்ற போது போதியளவில் மேற்பார்வை செய்யப்பட்டதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டதற்கும் கொள்வனவு செயன்முறையின் போது |

பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், அச்செயற்பாட்டிற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் இறுதி அளவீட்டு அறிக்கையொன்று இல்லாமல் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 2,204,465 தொகை பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 444,839 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,759,626 ஆன வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன், நிர்வாக செலவினம் ரூபா 5,067,666 ஆல் அதிகரித்தமையே இதற்கு தாக்கமளித்த பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

முன்னாள் தலைவரிடமிருந்து நிறுவகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 114,727 தொகையை அறவிடுவதற்காக நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

08 பேரைக் கொண்ட கல்வி பயிற்சி நிறுவகத்தின் கற்கை சபை மீளாய்வாண்டில் ஒரு கூட்டத்தை மாத்திரம் நடாத்தியிருந்ததுடன், அக்கூட்டத்திற்காக 03 பேர் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். அதன் பிரகாரம் தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 8(i) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள கற்கை சபையால் நிறுவகத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்காக போதியளவு பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பின்வரும் இலக்குகளை செயற்படுத்துவதின் செயல்முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தன.

i. அரச ஊழியர்களுக்கு சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் போன்ற மொழிகளை கற்பிப்பதற்காக வளவாளர்களைப் பயிற்றுவித்தல்.

ii. மொழிச் சங்க தேசிய வியாபாரங்களின் கீழ் பொது மக்களுக்கு சிங்களம் / தமிழ் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்.

iii. அரச உத்தியோகத்தர்களுக்காக தொழில்சார் ஆங்கில மொழி பாடநெறி.

iv. பாடநெறிகளை தயார்படுத்தல் மற்றும் திட்டமிடல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

(ஆ) பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

i. விடயப்பரப்பு அபிவிருத்தி பயிற்சி வழிகாட்டி புத்தகங்கள், ஆசிரியர் வழிகாட்டிகளை தயாரித்தல் (மொழிச் சங்கம் சிங்களம்)

ii. வேறு வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக மத்திய இந்திய மொழிகள் நிறுவகத்துடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் நிகழ்சசித்திட்டங்கள்.

iii. அரச உத்தியேகத்தர்களின் முன்னணி மொழி இயலுமையை மேம்படுத்துவதற்காக ஆங்கில மொழிப் பாடநெறிகள் மற்றும் பாடவிதானங்களை தயாரித்தல்

**5.2 கணக்காய்வுக் குழு**

கணக்காய்வுக் குழுக் கூட்டம் காலரீதியாக கிரமமாக நடாத்தப்படாமல் இருந்ததுடன், 2013 நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய மாதங்களில் 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே கருத்திற் கொள்ளக்கூடியளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வாகனப் பயன்பாடு

(ஈ) நூலக நிர்வாகம்